**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**அ.வ.எண். 259 /2020**

நாள்– 14.07.2022

பி.வா.சா. 1 – **திரு.கே.எஸ்.பூபதி**

**வாதி தரப்பின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வேலுச்சாமி தற்போது கூத்தம்பூண்டி கிராமம், ஒட்டன்சத்திரம் தாலுகாவில் குடியிருந்து வருகிறார். அவர் எனது பக்கத்து ஊர்க்காரர். என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பானது ஈரோடு முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து வரும் அ.வ.எண்.40/2016 வழக்கிற்கு நான் அனுப்பி வைத்த வழக்கறிஞர் தனி அறிவிப்பு என்றால் சரிதான். அந்த வழக்கிறஞர் அறிவிப்பின் நகல் அதனுடன் தாக்கல் செய்த மெமோ, மற்றும் திருப்பப்பட்ட உறையின் நகல், ஆகியவைகளின் நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ 9 ஆகும். அந்த விலாசம் வேலுச்சாமி சொல்லித்தான் தெரியுமா என்றால் எனக்கு ஏற்கனவே தெரியும். 5 பேர் சேர்ந்து வாங்கிய கிரயமானது எதற்காக பெறப்பட்டது என்றால் நாங்கள் அனைவரும் சேர்ந்து வீடுகள் கட்டுவதற்காக வாங்கினோம். நாங்கள் 5 பேரும் உறவினர்களா, நண்பர்களா என்றால் நானும், எனது சகோதரர் பழனிசாமி மற்றும் வேலுச்சாமி ஆகியோர் உறவினர்கள், மற்ற இருவரும் எனது நண்பர்கள். 2013 ம் ஆண்டில் கிரயம் வாங்கிய சொத்தின் மதிப்பு ரூ.30 லட்சம் ஆகும். அதில் ஒரு பங்கு தலா 6 லட்சம் போட்டோம். அந்த பூமியின் மதிப்பு தற்போது விலை ஏறிக் கொண்டுள்ளதா என்றால் அதே நிலையில் தான் உள்ளது. தற்போது அந்த பூமி என்ன விலைக்கு செல்லும் என்றால் தெரியாது. நான் 12.01.2016 ல்கிரயம் வாங்கினேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 7 ஆவணத்தில் நான் கிரயம் வாங்கிய தாவா சொத்தின் மதிப்பு ரூ.13,77,000/–. வா.சா.ஆ 6 ன் படி நாங்கள் கூட்டாக வாங்கிய கிரய ஆவணத்தில் தாவா சொத்து உள்ளிட்ட 5 பங்குகளின் மதிப்பு ரூ.30 லட்சம். 2016 ல் நான் வாங்கும் போது ஒரு பங்கின் மதிப்பு ரூ7,77,000/– அதிகம் ஆகியுள்ளதா என்றால் ஆமாம். நான் வாங்கிய கிரய ஆவணத்தின் சர்வே எண்.214/1ஏ. மற்றும் 214–4/ஏ ஆகும். அதுவும் பொதுவில் கண்டு தான் வாங்கியது ஆகும். அந்த சொத்தை விற்றவருக்கு அந்த சொத்து எப்படி அவருக்கு பாத்தியம் என்றால் அவருக்கு பூர்வீக சொத்து ஆகும். அந்த சொத்தில் மைனர் சுரேந்தருக்கும் பாத்தியம் என்று கண்டு கிரயம் வாங்கினீர்களா என்றால் ஆமாம். மைனர் சொத்தை கிரயம் வாங்குவது என்றால் நீதிமன்ற அனுமதி வாங்கினேனா என்றால் வாங்க வில்லை. அவ்வாறு மைனர் சொத்தை கிரயம் பெறும் போது நீதிமன்ற அனுமதி பெற வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 2016 ல் தாவா சொத்து கிரயம் வாங்கிய சமயத்தில் வேலுச்சாமி பவானி காளிங்கராயன் பாளையத்தில் இருந்தார். காளிங்கராயன் பாளையத்தில் சுமார் எத்தனை வருடங்களாக குடியிருந்தார் என்றால் சுமார் 10 வருடங்களாக குடியிருந்தார். எப்போது வேலுச்சாமி கூத்தம்பூண்டி சென்றார் என்றால் கிரயம் வாங்கி 1, 2 வருடங்களுக்கு பின்பு கூத்தம்பூண்டி சென்றார். எதற்காக கூத்தம்பூண்டி சென்றார் என்றால் என்ன காரணம் என தெரியாது. ஊரில் கடன் அதிகமாக இருந்தது என்றும், அதனால் கூத்தம்பூண்டி சென்றார் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அவர் எனக்கு நெருங்கிய உறவினர் என்றும், கடன் அதிகம் ஆனதால் அவர் சென்று விட்டார் என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மொத்தம் 5 பேர் கூட்டாக கிரயம் வாங்கிய சொத்தில், 4 பேருக்கு கிரயம் செய்யாமல், குறிப்பாக எனக்கு மட்டுமே

கிரயம் ஏன் செய்தார்கள் என்றால் வேலுச்சாமியின் அம்மா, பெரியம்மாவுக்கு உடல்நிலை சரியில்லாததாலும், மருத்துவ செலவுக்கு பணம் தேவைப்பட்டதால் நான் கிரயம் செய்தேன். மற்ற 4 பேரும் வேலுச்சாமியிடம் கிரயம் செய்வது பற்றி கேட்டார்களா என்றால் கேட்டதாக எனக்கு தெரியவில்லை. வேலுச்சாமியும் சொல்லவில்லை. 2ம்பி பிரதிவாதி எங்குள்ளார் என்றால் பவானி காளிங்கராயன் பாளையத்தில் விவசாயம் செய்து வருகிறார், அவரும் எங்கள் பக்கத்து ஊர்க்காரர். அவர் பவானி காளிங்கராயன் பாளையத்தில் 12 வீடுகள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளாரா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அவர் நல்ல வசதியானவர். 10,15 லட்சம் கடன் கொடுக்கும் அளவுக்கு வசதியானவரா என்றால் அது தெரியாது, ஆனால் வசதியானவர். அவர் கடன் கொடுக்கும் அளவிற்கு வசதியானவர் என்றும், நான் வழக்கிற்காக அவரை தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி சண்முகவேலை பற்றி எனக்கு தெரியாது. அவருக்கும் கடன் கொடுக்கும் அளவுக்கு வசதி உள்ளது, நான் வழக்கிற்காக அவரை தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி அடுத்த வாய்தாவிற்கு ஒத்திவைக்கப்படுகிறது)